# அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2019

## வகுப்பு 12

பதிவெண் | | | | | | |

நேரம்: 3.00 மணி

## PART - III - வணிகவியல்

மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல்
இ) பணிக்கமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்

2) பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ..............
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

3) பெரிய நிறுவனங்களின் தொழில் மூலதனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளர்களுக்கு உதவுவது .............. ஆகும்.
அ) பரஸ்பர நிதி ஆ) பங்குகள்
இ) கடனீட்டுப் பத்திரங்கள் ஈ) நிலை வைப்புகள்

4) **கூற்று (A)** : பட்டியலிடப்பட்ட பத்திரங்கள் மட்டுமே பங்கு சந்தையில் வர்த்தகம் செய்ய முடியும்.
**காரணம் (R)** : பங்கு மாற்றகம் அலுவல் பட்டியலில் இடம் பெறாத பங்குகளை வர்த்தகம் செய்ய அனுமதிப்பதில்லை.
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A)-க்கு சரியான விளக்கம்.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A)-க்கு சரியான விளக்கம் அல்ல.
இ) (A) தவறு ஆனால் (R) சரி.
ஈ) (A) சரி ஆனால் (R) தவறு.

5) மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவர் ..............
அ) உயர்நீதிமன்றத்தின் நீதிபதி ஆ) முதலமைச்சர்
இ) நிதியமைச்சர் ஈ) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி

6) நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் .............. பேச உரிமையில்லை.
அ) தணிக்கையாளர் ஆ) பங்குநர் இ) பகராள் ஈ) இயக்குனர்

7) மாவட்ட மன்றத்தின் தலைவர் ..............
அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர்நீதிமன்ற நீதிபதி
இ) உச்சநீதிமன்ற நீதிபதி ஈ) குடியரசுத்தலைவர்

8) பொருத்துக:

1. பொன்சந்தை - i) முக்கியத்துவத்தின் அடிப்படை
2. முறையான சந்தை - ii) புவியியல் அடிப்படை
3. குடும்ப சந்தை - iii) பொருட்களின் அடிப்படை
4. இறுதிநிலை சந்தை - iv) பொருளாதார அடிப்படை

அ) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv) ஆ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)
இ) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv) ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

9) சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ...............
அ) 1940 ஆ) 1997 இ) 1930 ஈ) 1960

10) கீழ்குறிப்பிடப்பட்டுள்ள எது காலம் தாழ்த்தும் பழமை விரும்பி தொழில் முனைவோருக்குப் பொருந்தும்?
அ) பழமை பேணுவது ஆ) இடர் வெறுப்பது
இ) ஐயப்படுவது ஈ) மாற்றிக் கொள்வது

11) ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது ............... இயக்குனர்கள் இருக்க வேண்டும்.
அ) 12 ஆ) 7 இ) 3 ஈ) 2

12) பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:
அ) முடிவெடுக்கும் திறன் சோதனை ஆ) அடைவுச் சோதனை
இ) நுண்ணறிவுச் சோதனை ஈ) ஆளுமைச் சோதனை

13) ஒரு சிறப்பு தீர்மானத்தை நிறும பதிவாளரிடத்தில் .............. நாட்களுக்குள்பதிய வேண்டும்.
அ) 7 ஆ) 14 இ) 30 ஈ) 60

14) புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ...............
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

15) எந்த வகை மேலெழுத்து மேலெழுதுபவரை மாற்றுமுறை ஆவண மறுப்பினால் எழும் பொறுப்பிலிருந்து விடுவிக்கின்றது?
அ) தடைப்படுத்துதல் ஆ) பொறுப்பு தவிர்
இ) கடமை தவிர் ஈ) நிபந்தனை

16) கீழே கொடுக்கப்பட்டவைகளில் சரியாகப் பொருந்தாத இணை எது?
அ) பணியாளர் சாதாரண பங்கு வெளியிடுதல் - தள்ளுபடியில் வெளியிடலாம்
ஆ) பங்குரிமை ஆணை வைத்திருப்பவர் - பொதுவாக நிறுமத்தின் உறுப்பினராகக் கருத முடியாது
இ) ஊக்கப் பங்குகள் - புதிய பங்குகளை வெளியிடுதல்
ஈ) கடன் பத்திரம் - உட்புற ஆதாரங்களை வளப்படுத்தும்

17) இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது ...............
அ) போர்டல் ஆ) சிபியூ இ) மோடம் ஈ) வெப்நராங்

18) பணிமாற்றம் என்பது ஒரு ............... ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அகவள ஆ) புறவள
இ) புறத்திறனீட்டல் ஈ) மேலே குறிப்பிட்ட எதுவுமில்லை

www.Padasalai.Net www.CBSEtips.in



19) உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை
இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

20) நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படுபவர் ..............
அ) திரு. F.W. டேலர் ஆ) திரு. ஹென்றிஃபோயல்
இ) திரு. பீட்டர் F. டிரக்கர் ஈ) திரு. லூயிஸ் A. ஆலன்

## பகுதி - II

7×2=14

குறிப்பு: எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

21) மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22) குரோத்தரின் கூற்றுப்படி பணச்சந்தை வரைவிலக்கணம் தருக.
23) புறத்தோற்றமற்ற பத்திரக்கணக்கு என்றால் என்ன?
24) வேளாண் தொழில் முனைவோர் என்பவர் யார்?
25) ஒழுங்குமுறைச் சந்தை என்றால் என்ன?
26) நுகர்வோர் என்பவர் யார்?
27) பெரு நிறுவன நிர்வாகத்தின் பொருள் என்ன?
28) பகராள் - சிறுகுறிப்பு வரைக.
29) கவர்தல் என்றால் என்ன?
30) உரிமையாளர் ஒருவர் தனது சொந்த பயனுக்காக தனது தொழிலில் இருந்து சரக்கினை எடுத்துக் கொள்கிறார். இதனை சரக்கு விற்பனை ஒப்பந்தமாகக் கருத முடியுமா? ஏன்?

## பகுதி - III

7×3=21

குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 40-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்.

31) பீட்டர் F. டிரக்கர் கூற்றுப்படி மேலாண்மையை வரையறுக்கவும்.
32) தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரிக்கவும்.
33) கலைமான் - குறிப்பு வரைக.
34) பயிற்சி பெறுபவர் மற்றும் பயிற்சி அளிப்பவர் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
35) தாராளமயமாக்கல் என்றால் என்ன?
36) ''சீர்மைப்படுத்துதல்'' - விவரிக்கவும்.
37) காசோலை மற்றும் மாற்றுச்சீட்டின் வேறுபாடுகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.
38) தொழில் முனைவையே தொழிலாகக் கொண்ட முனைவோர் எப்படி செயல்படுகிறார்?
39) சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
40) முகிலன் என்பவரின் ஒரு மாதக் குழந்தைக்கு $O^{-ve}$ வகை இரத்தம் அறுவை சிகிச்சைக்காக அவசரமாகத் தேவைப்படுகிறது. எவ்வகையான சந்தையிடுதல் உத்தியை அவர் பயன்படுத்துவார். ஏன்?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35

41) அ) மேலாண்மை மற்றும் நிர்வாகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக. (அல்லது)

ஆ) அரசுப் பத்திரங்களின் இயல்புகள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.

42) அ) பங்கு மாற்றகத்தின் குறைபாடுகள் யாவை?

(அல்லது)

ஆ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன் நோக்கங்கள் யாவை?

43) அ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

(அல்லது)

ஆ) பணியமர்த்தலின் கொள்கைகளை விளக்குக.

44) அ) ஏதேனும் ஐந்து முன்னுரிமைப் பங்குகளை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளைக் கூறுக.

45) அ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளில் ஏதேனும் ஐந்தினை விவாதிக்கவும். (அல்லது)

ஆ) ஒரு புகழ்பெற்ற திரைப்பட இயக்குநகராக ஒரு திறமை மிக்க இசையமைப்பாளரைத் தேர்வு செய்ய எவ்வகையான தேர்வு சோதனையை நடத்துவாய்?

46) அ) வணிகத்தின் சமூக கலாச்சார சூழலை விளக்குக.

(அல்லது)

ஆ) இயக்குனர்களின் குற்றவியல் சார்ந்த பொறுப்புகளைப் பற்றி எழுதுக.

47) அ) ஒரு முதலீட்டாளரை புறத்தோற்றமற்ற பத்திரக் கணக்கைத் தொடங்க எவ்வாறு ஊக்குவிப்பாய்? (அல்லது)

ஆ) நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் தெரிவிக்க தகுதிவாய்ந்த நபர்கள் யார்? புகாரை எவ்வாறு பதிவு செய்யலாம்?

######

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com